1993 ஏப்ரல் 6]

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 249, திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

249—

சென்னை மாநகராட்சியில் வளர்ச்சி மன்றம் அமைத்தல்

*9994— திரு. எஸ். ஜெயக்குமார் :
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்டங்களில் வளர்ச்சி மன்றங்கள் இருப்பது போல், சென்னை மாநகராட்சியில் வளர்ச்சி மன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்டங்களில் பல துறையினரால் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகளை முறைப்படுத்தி நிறைவேற்றவும், கண்காணிக்கவும் மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் உள்ளன. சென்னை மாநகராட்சிப் பணிகள் ஒரே உள்ளாட்சி மன்ற நிர்வாகத்தின் கீழ் வருவதால் தனியாக வளர்ச்சி மன்றம் சென்னைக்கென்று அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைத் தவிர மற்ற மாவட்டங்களில் இந்த மாவட்ட வளர்ச்சி மன்றம் இயங்குகின்ற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய குறைகளையும், அந்தத் தொகுதியிலுள்ள வளர்ச்சி குறித்தும் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்வதற்கு ஏதுவாக இருக்கிறது. அத்துடன் இந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பல முடிவுகளும் தெரிகிற நிலை இருக்கிறது. அந்த நிலையில் அந்த மாதிரி ஒரு வளர்ச்சி மன்றம் இல்லாத காரணத்தால் நாங்கள் எங்களது குறைகளையோ அல்லது வளர்ச்சிகளையோ அதிகாரிகளிடம் கலந்து ஆலோசிக்க முடியாத நிலை இருப்பதால் அந்த கார்ப்பரேஷனில் ஒரு ஆலோசனைக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையையும், அறிவுரையையும் பெற்று எதிர்காலத்திலே சென்னை மாநகராட்சி மூலமாக சென்னை மாநகராட்சியை உள்ளடக்கி இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் 3 மாதத்திற்கு ஒரு முறை கூட்டி ஆலோசனைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் அங்கே இருக்கிற ஒன்றிய அலுவலகத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூம் ஒதுக்கப்பட்டு மக்கள் குறைகளைக் கேட்பதற்கு ஆவன செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையிலே ஒவ்வொரு தொகுதியிலும் கார்ப்பரேஷன் ஏ.சி.ஆபிஸ் இருக்கிறது. ஆனால், அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அலுவலகமோ, ரூமோ ஒதுக்கப்படவில்லை. அதை ஒதுக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 250, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

250—

கறவை மாடுகள் வாங்க வழங்கப்படும் கடன் தொகையை உயர்த்துதல்.

*14417— திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கறவை மாடுகள் வாங்குவதற்கு தற்போது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் தொகையை ரூ. 10,000 ஆக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?